செ.வெ.எண்: 28 நாள்: 17.1.18

கடலூர் மாவட்டத்தில் ஜனவரி 28 ஆம் தேதி

## போலியோ சொட்டு மருந்து கொடுத்தல் முதற் கட்ட முகாம் பணிகள் துவக்கம்

போலியோ சொட்டு மருந்து கொடுக்கும் பணிகள் கடலூர் மாவட்டத்தில் ஜனவரி 28ஆம் தேதி முதற் கட்டமாக வழங்கப்பட உள்ளது. இப்பணிகளின் செயல்பாடுகள் குறித்து மாவட்ட ஆட்சித் தலைவர் திரு பிரசாந்த் மு.வடநேரே இ.ஆ.ப. அவர்கள் வெளியிட்டுள்ள செய்தி குறிப்பில் கூறப்பட்டுள்ளதாவது.

போலியோ என்னும் இளம்பிள்ளை வாத நோயினை தடுப்பதற்காக நாடு தழுவிய அளவில் போலியோ சொட்டு மருந்து கொடுக்கும் பணிகள் தொடர்ந்து 1995 ஆண்டு முதல் தொடங்கப்பட்டு தற்போது 23வது முறையாக தமிழ்நாட்டில் உள்ளஅனைத்து 0–5 வயதுள்ள குழந்தைகளுக்கு கொடுக்கப்பட உள்ளது.

கடலூர் மாவட்டத்தில் 1998க்கு பிறகு போலியோ பாதிப்பு எந்த ஒரு குழந்தைக்கும் ஏற்படவில்லை எனினும் போலியோ வைரஸ் தாக்கம் இனியும் தமிழகத்தில் அறவே வரக்கூடாது என்ற நோக்கத்தின்படி மத்திய மற்றும் மாநில அரசின் ஆணைகளுக்கிணங்க இந்த ஆண்டும் இரண்டு தவணை போலியோ சொட்டு மருந்து கொடுக்கும் பணிகள் இந்த ஆண்டு ஜனவரி 28ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமையன்று முதல் தவணையும் மார்ச் 11ம் தேதி ஞாயிற்றுக்கிழமையன்று இரண்டாம் தவணையாக சொட்டு மருந்து கொடுக்கும் பணிகள் கடலூர் மாவட்டத்தில் நடைபெற உள்ளது.

இப்போலியோ சொட்டு மருந்து கொடுக்கும் பணிகளுக்காக நகர்புறம் மற்றும் கிராமப்புறங்களில் உள்ள அரசு மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்கள், பள்ளிக்கூடங்கள், சத்துணவு மையங்கள், அங்கன்வாடி மையங்கள், நகர்புற ஆரம்ப சுகாதார நிலையங்கள் என 1611 மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. அடுத்தடுத்த மாவட்ட எல்லை ஓரங்கள், குடிசைபகுதிகள், புதிதாக உருவான காலணிகள், பணி நிமித்தம் இடம்பெயர் மக்கள் வாழும் பகுதிகளில் ஆகிய இடங்களில் சிறப்பு மையங்கள் அமைக்கப்பட்டு மாவட்டத்தின் மொத்த மக்கள் தொகையான 27,16,522 ல் ஐந்து வயதிற்குட்பட்ட 2,51,676 குழந்தைகளுக்கு இச்சொட்டு மருந்து கொடுக்கப்பட உள்ளது. (சுமார் 9.3 சதவிகிதம்) இப்பணிகளில் சுகாதாரத் துறையுடன்

இணைந்து மருத்துவ துறை, பள்ளிக்கல்வித்துறை, ஊட்டச்சத்து துறை, சமூக நலத்துறை, வருவாய் துறை, இந்திய மருத்துவ கழகம், இந்திய குழந்தைகள் நல மருத்துவ கழகம் பங்கேற்று செயல்பட உள்ளனர். மற்றும் அரசு சாரா தன்னார்வ தொண்டு நிறுவனங்களின் பணிகள் மிகவும் முக்கியமானது. இப்போலியோ சொட்டு ம்ருந்து முகாம்களில் ரோட்டரி சங்கத்தினரின் செயல்பாடுகள் குறிப்பிடத்தக்கது.

முகாம் நாளன்று முகாம் ஒன்றுக்கு 4 நபர்கள் வீதம் இப்பணி புரிய பல்வேறு துறைகளை சார்ந்த 6444 பணியாளர்களும், இப்பணிகளை மேற்பார்வையிட 209 மேற்பார்வையாளர்களும், மாவட்ட அளவில் 52 சிறப்பு குழுக்களும் அமைக்கப்பட்டுள்ளன. ஏதேனும் காரணங்களுக்காக விடுபடும் குழந்தைகள் அடுத்து வரும் இரண்டு நாட்களில் இப்பணியாளர்கள் மூலம் வீடு வீடாக சென்று பார்வையிட்டு விடுபட்டோருக்கு சொட்டு மருந்து கொடுக்க உள்ளனர். மேலும் இப்பணிகளுக்காக நடமாடும் குழுக்கள் பேரூந்து நிலையங்கள், புகைவண்டி நிலையங்கள், கோவில்கள், மக்கள் கூடுமிடங்கள் போன்ற இடங்களில் அமைக்கப்பட்டுள்ளன.

இம்முகாம்களில் வழங்கப்படும் போலியோ மருந்துகள் யாவும் புதிதாக உற்பத்தி செய்யப்பட்டவை. வீரியம் மிக்கவை . தரம் வாய்ந்தவை. தருவிக்கப்பட்டு மருந்துகள் யாவும் பாதுகாப்பானவை. எனவே முதற் கட்ட முகாம் நடைபெறும், ஜனவரி 28ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமையன்று தங்களின் 5 வயதிற்குட்பட்ட குழந்தைகளை ஏற்கனவே சொட்டு மருந்து கொடுக்கப்பட்டு இருப்பினும் தற்போது மீண்டும் சொட்டு மருந்து கொடுக்கப்பட தவறாமல் முகாம்களுக்கு அழைத்து சென்று போலியோ சொட்டு மருந்து கொடுத்து பயனடையுமாறு மாவட்ட ஆட்சித் தலைவர் சார்பாக கேட்டுக் கொள்ளப்படுகிறது.

இவ்வாறு அந்த செய்திக்குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

17/1/18

துணை இயக்குநர், சுகாதாரப் பணிகள்
கடலூர்

மாவட்ட ஆட்சித் தலைவர்
கடலூர்

வெளியீடு - செ.ம.தொ.அ.
கடலூர்.